### கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு! முதல்வரின் சீரிய ஆலோசனைகளால்

# ஆதிதிராவிடர் - பழங்குடியினருக்கு சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன!

## துறை மானியக் கோரிக்கையில் 19 அறிவிப்புகளை அறிவித்து அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பதிலுரை!

**சென்னை, ஜூலை 1 - சட்டப்பேரவையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மானியக் கோரிக்கையில் பதிலளிக்கையில் அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ், முதல்வரின் சீரிய ஆலோசனைகளால் ஆதிதிராவிடர் - பழங்குடியினருக்கு சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டார்.**

ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கையில் அமைச்சர் கயல்விழி செல்வராஜின் பதிலுரை வருமாறு:-

இன்றைய திராவிட மாடல் அரசின் கொள்கைகளுக்கு அன்றே வித்திட்ட திராவிட இயக்க பெரியோர்கள் சர்.பி.டி. தியாகராயர், டி.எம். நாயர், டாக்டர் நடேசனார், சிங்காரவேலனார், அயோத்தி தாசப் பண்டிதர், தாத்தா இரட்டைமலை சீனிவாசனார், பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட எண்ணற்ற முன்னோர்களை நினைவு கூர்ந்து வணங்குகிறேன்.

தடி கொண்டு சுற்றிட்டார்; சுழன்று சுழன்று வந்திட்டார்; திட்டி, திட்டி உரைத்திட்டார்; தேகம் தேய உழைத்திட்டார்; நாம் பெற்றிட்ட உயரங்கள்; அவர் விதைப்பின் விருட்சங்கள். அந்த பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரை வணங்குகிறேன்.

பாபாசாகேப் அம்பேத்கர் தனி ஒருவரின் பெயரல்ல, ஒரு சமூகத்தை வளர்த்த காரணப் பெயர்; அடிமை விலங்கொடித்த ஆச்சரியப் பெயர்; சனநாயகம் காத்திடும் தத்துவத்தின் பெயர்; அரசியல் சாசனம் தந்திட்ட ஆனந்தப் பெயர்; அண்ணல் அம்பேத்கர் அவர்களை வணங்குகிறேன்.

திட்டங்கள் பல தந்தார். எளியோரின் விழிநீர் இவர் பேனா கரங்களால் துடைக்கப்பட்டது.

மகளிருக்கு சொத்துரிமை, மாணாக்கருக்கு இலவச கல்வி, உழவருக்கு மின்சாரம், சாதி மறுக்கும் சமத்துவபுரம், இப்படி இவர் பேனா தந்த திட்டங்கள், ஒடுக்கப்பட்டவர்களுக்கும், உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கும் கேடயமாயின, அவர் புகழ் நிலைக்கும் நூற்றாண்டுகள் கடந்தும், அதை இத்தமிழுலகம் சொல்லும், அந்த சாதனை நாயகன், தமிழினத்தின் விடியல் போராளி முத்தமிழறிஞர் கலைஞர் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

தமிழும், தமிழரும் ஏற்றம் காண, தந்தை வழியில் உழைத்திடுவார், தன்னையே உருக்கிடுவார், திட்டங்கள் பல தீட்டி, திறம்படவே சேர்த்திடுவார், இந்தியாவை பேணிடவே, I.N.D.I.A அமைத்திட்டார், சனநாயகம் காத்திட்டார். சனங்களையும் காத்திட்டார். கடுமையாக உழைத்திட்டார், மக்கள் மனம் வென்றிட்டார். மக்கள் 40க்கு, 40யும் தந்திட்டார், நமது முதல்வர் கரங்களில். முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். இளைஞர் நலனோ, விளையாட்டு மேம்பாடோ, துறை எதுவானாலும் முதன்மையாக்கிடுவார். இந்தியாவின் விளையாட்டு தலைநகராய் சென்னையை ஆக்கிட்டார். மக்களுக்கு ஒன்றென்றால் ஓடி ஓடி உதவிடுவார். தேர்தல் என்றாலோ தேனியாய் சுற்றிடுவார். மக்களைப் பார்ப்பதிலே இவருக்கு மகிழ்ச்சி, இவரை காணும் போது மக்களுக்கோ எழுச்சி. இவரின் அணுகுமுறை தனித்துவம் வாய்ந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொத்து. இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், சகோதரர் அவர்களை வணங்குகிறேன்.

திருப்பூர் மாவட்டத்தில் என்னை வழிநடத்திச் செல்லும் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், மு.பெ. சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர் இல. பத்மநாபன் , என்னை இம்மன்றத்திற்கு அனுப்பி வைத்த, தாராபுரம் தொகுதியின் கழக உடன்பிறப்புகள் மற்றும் தொகுதி வாழ் மக்கள் அனைவரையும் அன்போடு வணங்குகிறேன்.

இந்த மாமன்றத்தில் எத்தனையோ பெரும் ஆளுமைகள், அறிஞர்கள் மற்றும் தலைவர்கள் செய்திட்ட எண்ணிலடங்காச் சேவையை நன்றியோடு நினைவு கூர்ந்து பேரவைத் தலைவர், பேரவை துணைத் தலைவர், அவை முன்னவர், மூத்த அமைச்சர் பெருமக்கள், அரசு கொறடா, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வணங்கி என் உரையைத் துவங்குகிறேன்.

2023-2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை, முதல்வர் அவர்கள் விதி எண். 110ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் மானியக் கோரிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் என மொத்தம் 31 அறிவிப்புகளில், இதுவரை 30 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 1 அறிவிப்பு அரசாணை வெளியீட்டிற்கு பொருட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பயன்பெறும் வகையில் திருமணக்கூடம், உள்விளையாட்டுக் கூடம், கற்றல் மற்றும் பயிற்சி மையம் போன்ற வசதிகள் கொண்ட 120 சமூகக்கூடங்கள் சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கும், பழங்குடியினர் வாழ்விடங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், வாழ்வாதாரத்தை உயர்த்திடவும், "தொல்குடி" என்ற புதிய திட்டம் ஆண்டுக்கு ரூபாய் 250 கோடி வீதம், நான்கு ஆண்டுகளில் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பிற்கும், பல்வேறு பழங்குடியின மக்களின் மொழி வளங்கள் மற்றும் ஒலி வடிவங்களையும் எதிர்காலத் தலைமுறையினருக்குப் பயன்படும் வகையில் இனவரைவியல் நோக்கில் ஆவணப்படுத்திப் பாதுகாக்க 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்ற அறிவிப்பிற்கும், அனைத்துப் பள்ளிகளிலும், 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திறன் வகுப்பறைகள் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பிற்கும், மேலும், அனைத்துப் பள்ளிகளுக்கும் அதிவேக இணைய வசதிகள் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பிற்கும், சென்னை, தஞ்சாவூர், தருமபுரி, நாமக்கல் மாவட்டங்களில் கல்லூரி மாணவியர் விடுதிகளும், மதுரையில் கல்லூரி மாணவர் விடுதியும் மொத்தம் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு கட்டப்படும் என்ற அறிவிப்பிற்கும், தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் பிறந்தநாளை அரசு விழாவாக அறிவிக்கச் செய்த முதலமைச்சர் அவர்களுக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் துணைத் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 20242025 ஆம் நிதியாண்டில் மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 88,130.83 கோடியில் ஆதிதிராவிடர் துணைத் திட்டத்திற்காக ரூபாய்

## ஆதிதிராவிடர் - பழங்குடியின மாணவர்களுக்கு புதிய விடுதிகள்!

19,363.56 கோடி அதாவது (21.97%) மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டத்திற்காக ரூபாய் 1738.40 கோடி அதாவது (1.97%) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டை விட அதிகம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான துணைத் திட்டம் செவ்வனே செயல்படுவதை உறுதி செய்ய, 2023-2024 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, ஒரு சிறப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் நலத் துறைக்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் கல்வி சார்ந்த திட்டங்களுக்கு மட்டும் சுமார் 75.27 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அறிவைத் தேடி ஓடுங்கள்! நாளைய வரலாறு! உங்கள் நிழலாக! உங்களை தேட, ஓடி வரும்! என்ற அண்ணல் அம்பேத்கரின் பொன்மொழிக்கிணங்க, இளைய சமுதாயத்தினர் தங்கள் இலட்சிய கனவுகளை அடைய ஏதுவாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் பல்வேறு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் சிலவற்றை இப்பேரவைக்கு தங்கள் வாயிலாக தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசு சட்ட கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயின்று வரும் 774 மாணாக்கருக்கு, சிறந்த சட்ட நிறுவனங்கள் மற்றும் வழக்கறிஞர்களிடம் உள்ளகப்பயிற்சி (Internship) பெறுவதற்கு உதவித் தொகையாக மாதம் ரூபாய் 10,000/ வழங்கப்படுகிறது.

மேலும், சட்டக் கல்வி இயக்ககத்தின் மூலம் சென்னை, மதுரை உயர்நீதிமன்ற நீதியரசர்களிடம் உட்பயிற்சி பெறுவதற்கு கூடுதல் உதவித் தொகையாக 15 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கருக்கு ரூபாய் 10,000/ வழங்கப்படுகிறது.

12ம் வகுப்பு பயிலும் மாணாக்கருக்கு உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு குறித்த "வழிகாட்டு ஆலோசனை" (career guidance) அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டு சுமார் 13,000 மாணாக்கருக்கு உயர் கல்வி விழிப்புணர்வு வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள கல்வி நிறுவனங்களில் முதுகலை பட்டம் மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை படிக்கும் மாணாக்கரை ஊக்குவிக்கும் வகையில் ஒரு மாணவருக்கு ஆண்டொன்றிற்கு அதிகபட்சம் ரூபாய் 36 இலட்சம் வரை கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டில் 54 மாணாக்கர் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர். இது ஒரு சாதனை அளவாகும்.

இந்த ஆண்டு மட்டும் 119 பள்ளிகளில் அறிவு திறன் வகுப்பறைகளும், 87 பள்ளிகளில் அறிவு திறன் பலகைகளும், 186 பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் மாணாக்கர் பயனுறும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சென்னை மாவட்டத்தில் உள்ள 23 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்



நல விடுதிகளுக்கு ஒருங்கிணைந்த சமையலறைமூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டம் ரூ.3.73 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விடுதிகளை சீரான முறையில் பராமரித்து, மாணாக்கருக்கு கல்வி பயில உகந்த சூழலை உருவாக்கும் வகையில், பராமரிப்புப் பணிகள் மற்றும் கண்காணிப்புக் கேமரா, பயோமெட்ரிக் வருகைப் பதிவுடன்கூடிய விடுதி மேலாண்மை அமைப்பிற்கு ரூ.28.19 கோடி ஒதுக்கப்பட்டு 1,275 விடுதிகளில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

### விடுதி மாணவர்களின் உணவுக் கட்டணம் அதிகரிப்பு!

2023-2024 ஆம் ஆண்டு முதல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் செயல்படும் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கரின் உணவுக் கட்டணம் ரூ.1,000/ லிருந்து ரூ.1,400/ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கரின் உணவுக் கட்டணம் ரூ.1,100/லிருந்து ரூ.1,500/ஆகவும் உயர்த்தி வழங்கப் பட்டு வருகிறது.

மாவட்டங்களில் ஆய்வுக்கு செல்லும் போதெல்லாம் ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளை பார்வையிட்டு மாணவர்களிடம் உரையாடியதன் அடிப்படையில் உணவுக் கட்டண உயர்வுக்கு பரிந்துரை செய்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்நேரத்தில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உணவுக் கட்டண உயர்வின்மூலம் ரூ.1,71,844/ மாணவ, மாணவியர்கள் பயன்பெறுவார்கள் என்றும், இதன் மூலம் அரசுக்கு ரூ.68 கோடியே 77 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும் என்று குறிப்பிட்டு, இதை, இந்த திராவிட மாடல் அரசு செலவாக கருதவில்லை என்றும், மாணவர்களின் கல்விக்காக செய்யும் முதலீடாகவே கருதுகிறது என்று முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்துடன் கூறியதை மகிழ்ச்சியுடன் நினைவு கூறுகிறேன்.

மாணாக்கர் விடுதிகளில் அவர்களின் சமூகத் திறன்களை வளர்த்துக் கொள்ளவும், ஆர்வங்களை கண்டறிந்து அதன் வாயிலாக தன்னம்பிக்கையை வளர்க்கும் வகையில் சென்னை மாவட்ட மாணாக்கர் விடுதிகளில், இசை, இசை தகவல் தொழில்நுட்பம், நாடகம், புகைப்படக் கலை மற்றும் கவின் மன்றம் வாசித்தல் மற்றும் விவாதம் மன்றம், சுற்றுச்சூழல் மன்றம், சதுரங்கம் மற்றும் பிற விளையாட்டு மன்றம் ஆகிய 4 மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நான்கு மாவட்டங்களில் உள்ள 23 கல்லூரி மாணாக்கர் விடுதிகளில் ரூபாய் 21,19,749/ மதிப்பீட்டில் elibrary அமைக்கப்பட்டுள்ளது.

### ரூ.100 கோடி செலவில் மாணவர்கள் விடுதிகள்!

மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, நீலகிரியில் 8 நவீன மாணாக்கர் விடுதிகள் கட்டும் பணிகள் ரூபாய் 100 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதன் பலனாக, எமது பள்ளி, விடுதி மாணவர்கள், தேசிய கல்வி நிறுவனங்களின் நுழைவுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று NIT, NEET, NIFT ஆகிய தேசிய கல்வி நிறுவனங்களில் பயின்று வருகின்றனர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கருக்கு கல்வி பயிற்றுவிப்பதை எளிதாக்கும் வகையில் 2023-24 ஆம் கல்வியாண்டில் நவீன முறை வகுப்பறைகள் smart classrooms ரூபாய் 41.40 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு உள்ளன.

பழங்குடியினர் நல உண்டி உறைவிட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கருக்கு ஒப்பந்த அடிப்படையிலான 111 சிறப்பு ஆசிரியர்கள் மூலம் மாலை நேர சிறப்பு பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் குறித்த புகார் அளிக்கவும் சட்ட ஆலோசனைகள் வழங்கவும் தொழில் நுட்ப வசதியுடன் கூடிய உதவி மையம் சென்னையிலுள்ள ஆதி திராவிடர் நல இயக்ககத்தில் ஏற்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு முதல்வர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடும் அயோத்தி தாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டில், ஊரக பகுதிகளில் 1360 பணிகளும், பேரூராட்சி பகுதிகளில் 336 பணிகளும், தமிழ்நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு மையம் சார்பில் 32 பணிகளும் நடைபெற்று வருகின்றன.

### அயோத்தி தாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்படுத்தப்படும்!

மேலும், 2024-2025 ஆம் நிதியாண்டிற்கு அயோத்தி தாசப் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்திற்கு ரூ.230 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இங்கே முன்பு பேசிய உறுப்பினர் 100 கோடி ரூபாய்தான் ஒதுக்கினார்கள் என்று சொன்னார்கள். அது ஊரகப்பகுதி மட்டும், பேரூராட்சி, நகராட்சிகளுக்குப் பகுதிகளுக்கு 100 கோடி ரூபாய், இந்த வருடம் கூடுதலாக 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பேரவைத் தலைவர் அவர்களே, சாதி வேறுபாட்டை களைய சமூக நல்லிணக்கத்துடன் திகழும் சுமார் 37 மாவட்டங்களில் உள்ள 37 கிராமங்களுக்கு ரூபாய் 10 இலட்சம் நிதி வழங்கப்பட்டு, அக்கிராமங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் இத் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகின்றன.

சாதி வேறுபாடுகளற்ற மயானங்களை பயன்படுத்தி கொண்டிருக்கும் கிராமங்களை ஊக்குவிக்கும் வகையில் 66 சிற்றூர்களுக்கு ரூ.10 இலட்சம் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதிலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிப்பதிலும், தமிழக முதல்வர் தலைமையிலான இவ்வரசு முனைப்புடன் செயல்படுவதன் காரணமாக, வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த 154 நபர்களுக்கு வேலை வாய்ப்பும், 535 நபர்களுக்கு ஓய்வூதியமும், 1 நபருக்கு வீட்டுமனைப் பட்டாவும், 5 நபர்களுக்கு கல்வி உதவித் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

2023 - 2024 ஆம் ஆண்டு வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 4983 நபர்களுக்கு, ரூபாய் 51.35 கோடி தீருதவியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம், இதுவரை பெறப்பட்ட 3,942 மனுக்களில், 3,280 மனுக்களுக்கு தீர்வு கண்டுள்ளது. எஞ்சிய 662 மனுக்கள் தொடர் நடவடிக்கையில் உள்ளது.

வன உரிமைகள் அங்கீகரித்தல் சட்டம் 2006 இன்கீழ், இந்த ஆண்டு மட்டும் 4,868 தனிநபர் உரிமைகளும், 189 சமுதாய உரிமைகளும் பழங்குடி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை கூர்ந்தாய்வு செய்வதில், தனி சிறப்பு கவனம் செலுத்தியதன் அடிப்படையில் மே 2021 முதல் மே 2024 வரை 1851 சான்றிதழ்கள் மெய்த்தன்மை சரி

## ஆதிதிராவிடர் பழங்குடியின - 'நன்னிலம் மகளிர் நல உரிமைத் திட்டம்!'

பார்த்து வழங்கப்பட்டுள்ளது.

பழங்குடியினரின் சமூக, பொருளாதார முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்ட முதல்வர் தலைமையிலான இவ்வரசு, ரூபாய் 1000 கோடி செலவில் நான்கு ஆண்டுகளில், பழங்குடியினர் குடியிருப்புகளில் சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகளுக்காக, இந்த ஆண்டு ரூபாய் 250 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டு "தொல்குடியினர் வேளாண்மை மேலாண்மைத் திட்டம் - ஐந்திணை" மூலம் பழங்குடியினருக்கான வாழ்வாதார திட்டங்களை 3 ஆண்டுகளில் ரூபாய் 15.65 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கப்பட்டு முதலாம் ஆண்டிற்கான நிதி ரூபாய் 5.59 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற 500 நரிக்குறவர் மற்றும் 1000 இதர பழங்குடியினர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 79.00 கோடி மதிப்பீட்டில் 1500 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

மின் இணைப்பு வழங்க இயலாத வனக் கிராமங்களில் விளையும் சிறு தானியங்களை அரைப்பதற்கு ரூபாய் 29.85 இலட்சம் மதிப்பீட்டில் 10 சோலார் அரவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொலைதொடர்பு வசதி இல்லாத 78 கிராமங்களில் நீண்ட தூர கம்பியில்லா இணைப்பு long range wireless connectivity வசதிகள் ரூபாய் 622.02 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பழங்குடியின இளைஞர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் சாராத பிரிவுகளில் பெங்களூரு NTTF நிறுவனம்மூலம் ரூ.81.12 இலட்சம் மதிப்பீட்டில் 2 மாத திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்பட்டு, 148 நபர்களுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்று வழங்கப்பட்டுள்ளது.

சென்னை சமூகப்பணி பள்ளிமூலம் (Madras School of Social Work) தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினர் பற்றிய சமூக பொருளாதாரக் கணக்கெடுப்பு ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) 50 ஆண்டுகளை கடந்து, விளிம்பு நிலை மக்களின் வளர்ச்சிக்காக பல்வேறு தொழில்முனைவு திட்டங்கள், இளைஞர்களுக்கான திறன் வளர்ச்சி பயிற்சிகள் போன்றவற்றை அளிப்பதுடன் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை சார்ந்த கட்டுமானப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. 2023-2024 ஆம் ஆண்டு புதிய முன்னெடுப்புகளாக முதலமைச்சரின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் "CM Arise" மூலம் தனி நபர்களின் தொழில் திட்ட மதிப்பீட்டில் 35 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.3.5 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகையினை முன் விடுப்பு மானியமாக வழங்குகிறது.

2023-2024 ஆம் நிதியாண்டில் மட்டும் 2,058 பயனாளிகளுக்கு ஏறக்குறைய ரூ.40 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2023-2024 ஆம் நிதியாண்டில் TAHDCO பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ் பழங்குடியினர் இன மக்களுக்கு வங்கியால் ஒப்புதல் அளிக்கப்பட்ட (FormIII) இனங்களுக்கு 1,044 பயனாளிகளுக்கு ரூ.16.45 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

### தொழில் முனைவோருக்கான கண்காட்சி கருத்தரங்கம்!

தமிழ்நாட்டில் முதல் முறையாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின ருக்கான தொழில் முனைவோர் சிறப்பு கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் "TNBeat Expo 2024" சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெற்றது. இதில் 128 அரங்குகள் அமைக்கப்பட்டு, 25,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர். இக்கண்காட்சியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்த தொழில் முனைவோர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்தி, தொழில் வாய்ப்பினை பெற்றிடவும், பொது மற்றும் தனியார் துறையின் முன்னணி நிறுவனங்கள் தங்களின் தயாரிப்புகளை நேரடி கொள்முதல் செய்வதற்கும், தொழில் முனைவோர் புதிய தொழில் துவங்குவதற்கும், மானியத்துடன்கூடிய வங்கி கடன் பெற்றிடவும், உற்பத்தி பொருட்களை வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்கமும் நடத்தப்பட்டது. இக்கண்காட்சியில், கலந்துகொண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியை இந்நேரத்தில் தெவித்துக் கொள்கிறேன்.

முதல்வர் அவர்களின் ஆலோசனை பெற்று மற்றுமொரு சிறப்பு முன்னெடுப்பாக சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்க ளிலுள்ள ஆதி திராவிடர் நலப்பள்ளிகளில் பயிலும் 9 முதல் 11 வகுப்பு மாணாக்கருக்கு IIT Boeing தேசிய ஏரோ மாடல் போட்டியில் (IIT Boeing National Aeromodelling Competition) கலந்துகொள்ளும் வகையில் சிறப்பு பயிற்சி அளித்ததன் அடிப்படையில் அவர்கள் தங்களின் சொந்த விமான மாதிரிகளை வடிவமைத்து 7 மாநிலங்களிலிருந்து சுமார் 490 அணிகள் கலந்துகொண்ட இறுதி கட்டப் போட்டியில் முதல் 10 இடத்திற்குள் இத்துறை சார்ந்த அணி தேர்ந்தெடுக்கப் பட்டது என்பது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாகும். கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்ட போட்டியில் நம் துறையைச் சார்ந்த பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு முதல் 10 இடங்களுக்குள் வந்திருக்கிறார்கள்.

மகளிரை நில உடைமையாளராக்கும், மகளிர் நிலம் வாங்கும் திட்டத்தின்கீழ் 2023- 2024 ஆம் நிதியாண்டில் 191 மகளிர் பயனாளிகளுக்கு அவர்கள் நிலம் வாங்க ரூ.8.96 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

PM Ajay (Pradhan Mantri Anusuchit Jaati Abhyuday Yojna) திட்டத்தில் கால் நடை வளர்ப்பு, பால் பண்ணை, கோழிப் பண்ணை, ஆடு அலகு அமைத்தல், மீன் வளர்ப்பு, பல்பொருள் அங்காடி போன்றவற்றிற்காக, 20232024 ஆம் நிதியாண்டில் மட்டும் தனிநபர் திட்டத்தொகையாக 50% அல்லது அதிகபட்சமாக ரூ.50,000/ மானியமாக 9,459 பயனாளிகளுக்கு ரூ.51.23 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

2023 - 2024 ஆம் நிதியாண்டில் மாநில அரசு நிதியுதவியுடன் 12 நபர்களை கொண்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு ரூ.2,50,000/ வீதம் 229 குழுக்களுக்கு ரூ.5.72 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

தூய்மை பணியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக தேசிய துப்புரவு பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின்மூலம் 587 தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தார்களுக்கு ரூ.109 இலட்சம் கால முறை கடன் வழங்கப்பட்டுள்ளது.

முதல்வர் அவர்களின் அறிவுரைப்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி TAHDCO மூலம் பல்வேறு தளங்களில் வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாகவும், சிறப்பாகவும் சொல்ல வேண்டும் என்றால், HCL நிறுவனத்தின் வேலை வாய்ப்புடன்கூடிய பட்டப் படிப்பு, drone இயக்கப்பயிற்சி, UPSC, SSC, TNPSC போன்ற போட்டித் தேர்வுகள் NEET, JEE, CLAT, SPOKEN ENGLISH பயிற்சி, வெளி நாடுகளில் பயிலக்கூடிய CAT பயிற்சி, Medical coding பயிற்சி, TCS iON நிறுவனத்தின் மூலம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் animation சம்பந்தப்பட்ட பயிற்சி.

இப்படி எண்ணற்ற திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கியதன்மூலம், இந்த ஆண்டு மட்டும் ரூபாய் 20.18 கோடி செலவில் சற்றேறக்குறைய 5,324 மாணாக்கர்கள் பயனடைந்துள்ளார்கள்.

வரும் ஆண்டுகளில் பயிற்சி பெற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்று முதல்வர் அவர்களின் கனவான "இளைஞர்களுக்கு முழு வேலைவாய்ப்பு" என்ற நிலை நோக்கி நகரும் வாய்ப்பு கிடைக்கும் என்பதை தங்கள் வாயிலாக இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

### அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிகள்!

மக்கள் நலத் திட்டங்கள்! மாபெரும் திட்டங்கள்! தொழில் வளர திட்டங்கள்! தொழிலாளருக்கும் திட்டங்கள்! சிறாருக்கும் திட்டங்கள்! சிறுபான்மையினருக்கும் திட்டங்கள்! மகளிருக்கும் திட்டங்கள்! மாணாக்கருக்கும் திட்டங்கள்! ஆதி திராவிட மக்களுக்கும் திட்டங்கள்! மொத்தத்தில் அனைவருக்கும் திட்டங்கள்! அத்தனையும் நலன்பயக்கும் திட்டங்கள்! இப்படி நல்லாட்சி தொடர்வதாலே! நலம் பல விளைவதாலே! நாடாளும் தேர்தலோ! நம் மாநில தேர்தலோ! விளவங்கோடு தேர்தலோ! விக்கரவாண்டி தேர்தலோ! வெற்றிக்கனி - நம் முதல்வர் கரம் சேரும்... சிந்தாமல், சிதறாமல்!

மானியக் கோரிக்கையில் பங்குபெற்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது பதிலுரையில் மானியக் கோரிக்கைக்குத் தேவையான தகவல்களைத் தந்து உதவிய தலைமைச் செயலாளர், முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள், முதல்வர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், நிதித் துறை முதன்மை செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் செயலாளர் திருமதி. லட்சுமி பிரியா, ஆதி திராவிடர் நல இயக்குநர் ஆனந்த். பழங்குடியினர் நல இயக்குநர் அண்ணாதுரை CLS, தாட்கோவின் தலைவர் அண்ணன். உ. மதிவாணன், தாட்கோ மேலாண்மை இயக்குநர் கந்தசாமி, .சமூக நீதி மற்றும் மனித உரிமைகளுக்கான காவல் துறைத் தலைவர் திருமதி. சாமுண்டீஸ்வரி, . ஆகியோர்களுக்கும் மற்றும் அல்லும் பகலும் அயராது உழைத்து, என்னோடு பணியாற்றிய துறை சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும், எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கையின் மீது உறுப்பினர்கள் 123 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளீர்கள். தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் சுட்டிக்காட்டிய ஆலோசனைகள் மற்றும் திட்டங்களை நன்கு பரிசீலனை செய்து, முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று, உரிய வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, வெட்டுத் தீர்மானங்களை

தொடர்ச்சி 9 ஆம் பக்கம்